முல்லைப் பாட்டுக் காட்டும் பாசறைச் செய்திகள்

முனைவர் பேரா. க. அழகர்
முதல்வர், மகாத்மா காந்தி கலை மற்றும்
அறிவியல் இருபாலர் கல்லூரி, சோலைசேரி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மே

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8967

முன்னுரை

முல்லைப் பாட்டினை இயற்றியவர் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார். இந்நூல் 103 அடிகளை உடையது. ஆசிரியப்பாவால் அமைந்தது. இது அகம் சாரந்த நூலாகும். முல்லைத் திணையைப் பாடியதால் முல்லைப் பாட்டு எனப்பட்டது. “இல்இருத்தல் முல்லையாகும். வினைமேற் சென்ற தலைவன் இல்லம் திரும்பும் வரை தலைவி இல்லத்தின கண் இருந்து பிரிவுத் துயரை ஆற்றியிருந்தல் இதன் பொருளாகும்”. இதற்கு நெஞ்சாற்றுப் படை என வேறு பெயரும் உண்டு.

இம்முல்லைப் பாட்டில் பெருமுது பெண்டிர் விரிச்சி பார்க்கும் வழக்கம், பாசறை அமைப்பு, யானைப் பாகர்கள் யானையைப் பழக்கும் முறை, வீரமங்கையர் இடையில் வாளேந்தி கையில் விளக்கேற்றி, அணையாது காத்தல், நாழிகைக் கணக்கர், மெய்க்காப்பாளர் போன்ற செய்திகள் முல்லைப் பாட்டில் வருவதைக் காணலாம். இங்கு முல்லைப் பாட்டில் முகம் காட்டும் பாசறையின் செய்திகள் என்னும் தலைப்பில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

முல்லை - பொருள் விளக்கம்

பச்சை நிறக்காம்பில் சிறிய வெண்ணிற இதழ்களைக் கொண்ட வாசனை மிகுந்த பூ முல்லையாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஐந்து வகைத் திணைகளில் “காடும் காடும் சார்ந்த இடமும் முல்லையாகும்” எனப் பொருள் கூறுகிறது அவ்வைத் தமிழ் அகராதி தமிழ் ஆங்கிலம் ப. 812.

முல்லை என்பது ஒரு பூக்கொடி வகை, காட்டு மல்லிகைச் செடி, ஊசி மல்லிலை, உரிப்பொருள்களில் ஒன்றாகி இருத்தல், கற்பு, வெற்றி, முல்லைப்பாட்டு, முல்லைக்குழல் எனப் பொருள் கூறுகிறது. (மாணவர் தமிழ் அகராதி ப. 452)

பாசறையின் அமைப்பு

பாசறை என்னும் சொல்லுக்குக் கூடாரம் என்று பொருள். போருக்குச் சென்றவர் தாங்கள் தங்குவதற்காக வெளியில் அமைத்துக் கொண்ட இடம் எனப் பொருள் கூறுகிறது. (மாணவர் தமிழ் அகராதி ப. 253)

"முற்காலத்தில் போரிடச் செல்லும் அரசர் அல்லது தளபதி தங்கள் படைகளின் நடுவே தங்கியிருக்க அமைத்துக் கொண்ட அமைப்பு" எனப் பொருள் கூறுகிறது. *(அவ்வைத் தமிழ் அகராதி ப. 638)*

முற்காலத்தில் காட்டுப் பகுதியில் காவல் காரணமாக வேடர்கள் சிறு சிறு அரண் அமைத்துக் காவல் செய்தனர். போருக்குச் சென்ற வீரர்கள் அவ்வேடுவர்கள் கட்டிய அரண்களை அழித்துக் காட்டிலே தம் பாசறையை அமைத்துக் கொண்டனர்.

காட்டாறு சூழ்ந்த அகன்ற காட்டுப் பகுதியின் அருகில், நீண்ட தூரம் மணம் வீசக் கூடிய பிடவத்தோடு, பசிய குறுந்தூறுகளையும் வெட்டியழித்தனர். பின்பு வேடருடைய அரண்களையும் அழித்தனர். பின்பு பாசறையைச் சுற்றி முள் வேலியாகிய மதில் சுவரினை அமைத்தனர். அப்பாசறை கடல் போன்று விரிந்துள்ளது என முல்லைப் பாட்டுக் கூறுவதைக் காணலாம்.

"கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுள் புரிசை ஏமுற வளைஇ
படுநீர்ப் புணரியின் பரந்தபாடி"

(முல்லைப்பாட்டு - 24-28)

பண்டைக் கால அரசர்கள் அரண்மனைகளுக்கு, நீர் அரண், நில அரண், மலை அரண் காட்டரண் என நான்கு வகை அரண்கள் அமைத்தல் வழக்கம். அரண் என்பது பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்படும் மதில், தடுப்பு போன்ற அமைப்பு ஆகும். ஆழமான நீரையுடைய அகழியும், மணல் பரப்பு நிறைந்த மேடுகளும், மணல்களும், மரம் அடர்ந்த காடுகளும் ஆகியவற்றைப் பாதுகாவலாக உடைய கோட்டையைப் பகைவர் எளிதில் கைப்பற்ற முடியாது. இக்கருத்தையே வள்ளுவர் பின்வறுமாறு கூறுவதைக் காணலாம்.

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்"

(குறள் - 742)

வீரர்கள் தங்கும் பாசறை

போரில் ஈடுபடும் வீரர்கள் தங்குவதற்கெனப் பாசறைகள் அக்காலத்தில் அமைத்து இருந்தனர். காவி நிறத்தையுடைய துணியை அணிந்து தவவேடம் பூண்ட, முக்கோல் உடைய அந்தணன், தனது முக்கோலை நட்டு, அதன் மீது தனது காவியுடைய தனது ஆடையை அதன் மீது இட்டு வைத்த தன்மையில் அறநெறியில் செய்கின்ற போரில் வீரர்கள் புறமுதுகிட்டு ஓடாமைக்குக் காரணமான தமது வில்லை ஊன்றி அவற்றின் மீது தமது துணிகளைத் தொங்கவிட்டு இருந்தனர். பின்பு வீரர்கள் கூடாரமாகக் கால்களை நட்டு அவற்றை கயிற்றால் வலித்துக் கட்டின இருக்கையில் குந்தக் கோல்களை நட்டுக் கிடுகுப் பட்டைகளை வரிசையாகப் பிணைத்து அமைத்தனர் என்கிறது முல்லைப்பாட்டு.

"கல்தோய்ந்து உடுத்து படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நல்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்
கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கைப்
பூந்தலைக் குந்தம் குத்தி, கிடுகு நிரைத்து
வாங்குவில் அரணம் அரணம் ஆக"

(முல்லைப்பாட்டு - 37-42)

துறவிகள் மூன்று கோல்கள் சேர இணைத்ததொரு முக்கோலை அந்தணர் கையில் ஏந்தியிருந்ததை தொல்காப்பியம் சுட்டுவதைக் காணலாம்.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயங்காலை அந்தணர்க்குரிய"

(தொல் - மரபு - நூல். 20)

அரசனுக்கு அமைத்த பாசறை

பல்வேறு படைவீரர்களின் இருக்கைக்கு நடுவே, நெடிய ஒரு தனி இடத்தில், நெடிய குத்துக் கோலையுடைய மதில்திரை வளைத்து

அரசனுடைய அரணாகிய பாசறை அமைக்கப் பட்டதை முல்லைப் பாட்டுச் சுட்டும்.

“வேறுபல் பெரும்படை நாப்பண், வேறுஓர்
நெடுங்காழ்க் கண்டம் கோலி அகம் நேர்பு”
(மு. பா. 43-44)

பாசறையில் பெண்கள் இருத்தல்

பெண்கள் பாசறைக்குச் செல்லும் பழக்கம் இருந்ததை அறிய முடிகிறது. அரசன் போருக்குச் செல்லும்போது அவர்களையும் அழைத்துச் செல்வான். அப்பாசறையில் உள்ள பெண்கள் வாட்படையை உடையவராய் விளங்கினர். மகளிர் தம் கச்சில் வாளைச் சேர்த்துக் கட்டியிருந்தனர். அவர்கள் வளையல் அணிந்த முன் கையினையும், கூந்தல் அலைகின்ற முதுகினையும் உடைய அவர்கள் பாவை விளக்கில் நீண்ட திரியை இட்டு, நெய் வார்க்கும் குழாயால் நெய் வார்த்து விளக்கு ஏற்றினர் என்பதை முல்லைப்பாட்டு மூலம் அறியலாம்.

“குறுந்தொடி முன்கைக் கூந்தல் அம்சிறுபுறத்து
இரவு பகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவு வரிக்கச்சின் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇ
கைஅமை விளக்கம் நந்துதொறும் மாட்ட”
(முல்லைப்பாட்டு - 45-49)

பாசறையில் பணிபுரியும் பெண்கள் அக்காலத்தில் தமது கச்சில் வாளைச் சேர்த்துக் கட்டியிருந்த அக்கால வழக்கத்தை அறிய முடிகிறது

பாசறையில் தங்கியிருக்கும் மன்னனின் மனநிலை

மன்னன் ஒரு கையைப் படுக்கை மேலே வைத்து, கடகம் அணிந்து தனது மற்றொரு கையால் தனது தலையைத் தாங்கியவாறு படுத்திருந்தான். உறக்கம் கொள்ளாமல் இரவு முழவதும் போர்க்களக் காட்சிகளை நினைத்தவாறே படுத்திருக்கிறான். போரில் பகைவர் எறிந்த வேலால் உடம்பில் புண்பட்ட பிடி யானைகளை மறந்த ஆண் யானைகளை நினைக்கிறான். அடிபட்ட பாம்பு துடித்தாற் போன்று துடிக்கும், யானைகளின் தும்பிக்கையினை வெட்டி வீழ்த்தி தானும் பொரில் மடிந்த தமது வீரர்களை நினைத்துப் பார்க்கின்றான். பகைவர் எறிந்த கூர்மையான அம்பின் நுனி புண்பட்டுக் கிடக்கும் குதிரைகள் பல் உண்ணாமல் இருக்கும் நிலையை நினைத்து பார்க்கிறான். இவ்வாறு பாசறையில் மன்னன் வருந்தும் நிலையை படம் பிடித்துக் காட்டுகிறார் நப்பூதனார்.

“மண்டுஅமர் நசையொடு கண்படை பெறாஅது
எடுத்து எறி எஃகம் பாய்தலின் புண் கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமிய
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்தி
சோறுவாய்ந்து ஒழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவி சாய்த்து
உண்ணர்து உயங்கும் மாசிந் தித்தும்
ஒரு கனக பள்ளி, ஒரு கை
முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து”
(முல்லைப்பாட்டு - 67-76)

பாசறையில் மெய்க்காப்பாளர் காவல் புரிதல்

மன்னனுக்கு மெய்காப்பாளராக இருப்பவர்கள், அவன் நம்பிக்கைக்கு உரியவராய், நல்லொழுக்கம் உடையவராய் விளங்க வேண்டும். எனவே நீண்ட நாள் தம்மிடம் பணியாற்றியவரையே அரசர் தம் மெய்க்காப்பாளராக நியமிப்பது வழக்கம். அந்த வகையில் பாசறையில் நெடிய நாக்கினையுடைய மணியின் ஓசை குறைந்து அடங்கிய நள்ளிரவில், புனலிப் பூக்கள் பூத்த சிறுசெடிகள் மழைத்தூறலுடன் வீசுகின்ற காற்றில் அசைந்தாடுவதைப் போன்று மயிர்க்கட்டுக் கட்டி மெய்க்காப்பாளர் அணிந்திருந்த சட்டை காற்றில் அசைந்து ஆட அவர்கள் மன்னனைச் சுற்றி காவலாக

நின்றனர். இக்கருத்தையே முல்லைப்பாட்டு கூறுவதைக் காணலாம்.

பாசறையில் அகப்பணி செய்யும் மிலேச்சர்

உள் அறையாகிய பள்ளி அறையில் அரசன் வீற்றிருந்தான். அவரோடு அகப்பணி செய்வதற்கும், போர்ச் செய்திகளை வெளியே சொல்லாமல் இருப்பதற்கும் அவனருகில் வாய்பேச முடியாத, மொழி அறிய முடியாத மிலேச்சர்கள் அரசனுக்கு பாதுகாவலுக்கு நிற்கிறார்கள். அவர்கள் பாசறையின்கண் மணிவிளக்கை எறிய வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

**"மத்திகை வளைஇய, மறித்து வீங்கு செறிவு
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை, வன்கண்யவனர்
திருமணி விளக்கம் காட்டி,
எழினி வாங்கிய ஈர்அறைய பள்ளியுள்
உடம்பின் உரைக்கும், உரயா நாவின்
படம்புகு மிலேச்சர் உழையர் ஆக"**

(முல்லைப்பாட்டு - 59-66)

பாசறையில் வெற்றி முழக்கம்

மறுநாட் போரில் அரசன் தாம் கைக்கொண்ட படைக்கருவியில் பகைவரை வென்றான். தாம் சூடிய வஞ்சி மாலைக்கு வெற்றியைத் தேடித்தந்தமையால், பகை மன்னர் நடுங்கும்படி வெற்றி முழக்கம் பாச றையின் கண் முழங்குகிறது. வினைமுடித்த மகிழ்ச்சியில் மன்னன் இனிதாகத் துயில் கொண்டான்.

**"பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசு இருந்து பணிக்கும் முரசு முழங்கும்
பாசறை"**

(மு.பா. 87-89)

முடிவுரை

போருக்குச் செல்லும் வீரர்கள் காட்டிலே வேடர்கள் அமைத்த அரண்களை அழித்து படைவீரர்களுக்குதனியாகவும், மன்னருக்கு தனியாகவும் தனித்தனி பாசறை அமைத்து இருந்ததைக் காணமுடிகிறது. பாசறையில் இரவு நேரத்தில் மன்னனுக்குப் பாது காவலாக மெய்க்காப்பாளராக இருந்தனர் என்றும் பெண்களும் பாசறையில் தங்கிப் பணி புரிந்தனர் என்றும், மன்னன் போரில் புண்பட்ட போர் வீரர்களிடத்தும், விலங்குகளிடத்தும் மனித நேயம் மிக்கவனாகத் திகழ்ந்தான் என்பதையும் இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.